1986 நவம்பர் 25]

இயக்கத்தை நடத்திக் கொண்டிருப்பவர்களே அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள்தான். ஆகவே, அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். சட்ட சபை உறுப்பினர்கள் இடம் பெற்றால் இங்கே இருக்கும் சட்ட சபைக்கும் அமைச்சருக்கும் இந்த விவரங்களைக் கொண்டு வந்து சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்ற வகையில் இந்த யோசனை கவனத்தில் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு அமைக்கப்படும் முறை, அதனுடைய பணிகள் ஆகியவை நீண்ட பட்டியலாக அரசு ஆணையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அது அவ்வளவையும் சொல்வதென்றால் அது மிகப் பெரிய பதிலாக இருக்கும். நியாய விலைக் கடைகள் இருக்கும் பகுதிகளில் வசிக்கும் பொது நலத்தில் ஆர்வம் உடையவர்கள், முந்தைய அரசியல் தலைவர்கள், மருத்துவர், வழக்கறிஞர் மற்றும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சார்ந்த பெரியவர்கள் ஆகியவர்களை இந்தக் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கலாம். ஆகவே நாம் எல்லாம் பொது நலத்தில் ஆர்வமுடையவர்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், இன்னும் பிற பொது நல ஊழியர்கள் கொண்ட கண்காணிக்கும் குழு மிக அருமையாகப் பணி செய்து கொண்டிருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஏனெனில், அவருடைய பதிலில் அது இல்லை. அந்த நிலையை அறிந்து உணர்ந்து மாநிலம் முழுவதும் அது போன்ற குழுக்களை அமைத்து அதை ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையினர் தந்த தகவலைவிட மாண்புமிகு உறுப்பினர் தந்த தகவல் எனக்குக் கூடுதலாக இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

வாலாஜாபேட்டை தாலுக்கா, பூண்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு குடிநீர்த் திட்டம்.

165— (*வினா எண் 3920) திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டை தாலுக்காவில், உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவு நீரால் பாதிக்கப்பட்ட பூண்டி, அதனை சுற்றியுள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கூட்டு குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வடாற்காடு மாவட்டம் வாலாஜாபேட்டை வட்டம் பூண்டி, கடப்பேரி மற்றும் இதர வழியோரக் கிராமங்களுக்காகவும் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயற்படுத்த தமிழ்நாடு அரசு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் திருத்திய திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்பு, தொழில் நுட்ப அனுமதியும், நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டு, திட்டம் செயல்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வாலாஜா தாலுக்காவில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவு நீரால் பாதிக்கப்படுகிற கிராமங்களுக்கு குடிநீர் வழங்குகிற திட்டத்தை அறிவித்தார்கள். அதற்கு நன்றி. இருந்தாலுமகூட பல கோடிக் கணக்கான ரூபாயில் அங்கே தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு, அவற்றிலிருந்து வருகிற கழிவு நீர் பாலாற்றில் கலப்பதால் வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கேயுள்ள பல நகரங்கள் பாதிக்கப்பட்டு ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற பல குடிநீர் திட்டங்கள் பாழாகிக் கொண்டிருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரியுமானால் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன? வருங்காலத்திலே வருகிற திட்டங்களும் பாழாகிற சூழ்நிலை இருக்கிறது. இதை அரசு ஆராய்ந்து முன்னெச்சரிக்கையாக அதற்காக எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருக்கின்ற தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் இரசாயன பொருள்கள் தொழிற்சாலைகள் காரணமாக அந்தப் பகுதியில் குடிநீர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியும். ஆகவே, அதற்கான தன்மையில் வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாஜா வட்டம், பூண்டி, கடப்பேரி, கடப்பந்தாங்கல், ஒட்டந்தாங்கல், சென்ன சமுத்திரம், கன்னிகாபுரம், மலைமேடு, தென் கடப்பந்தாங்கல், புளியந்தாங்கல், அம்மந்தாங்கல் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் உள்ள மொத்தம் 9,113 மக்கள் பயனடையும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த 31.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் இயக்குநரால் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரிடத்திலே நான் கேட்டது. ஏற்கெனவே திருப்பத்தூரிலிருந்து வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, குடியாத்தம், வேலூர் விஷாரம், ராணிப்பேட்டை, வாலாஜா ஆற்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பல்வேறு திட்டங்கள் பாதிக்கப்

பட்டிருக்கின்றன. பாலாற்றங்கரையின் இருபுறங்களிலும் இருக்கின்ற தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பாலாற்றில் கலக்கிறது. இதனால் கோடிக்கணக்கான ரூபாயில் செலவு செய்து போடப்படும் குடிநீர்த் திட்டங்கள், நகர்ப்புறங்களில் உள்ள குடிநீர்த் திட்டமாக இருந்தாலும், அவை உட்பட அனைத்துத் திட்டங்களும் வட ஆற்காடு மாவட்டத்திலே பாழாகிக் கொண்டிருக்கின்றன. (மணி அடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு நீரைப் பொறுத்தவரையில் சுத்திகரிக்க வேண்டும் என்பது சுற்றுப்புற சூழல் மற்றும் மாசு கட்டுப்படுத்துதல் துறை நிர்வாகத்தின் கீழ் வருகிறது.

திரு. ர. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறப்படுகிற கெமிகல்ஸ் கலந்த கழிவுநீரால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது. நிலத்தடிநீர் பாதிக்கப்படாமல் தடுக்க நீண்டகால கண்ணோட்டத்தோடு ஏதாவது திட்டம், செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியும் சுற்றுபுறச் சூழல் மற்றும் மாசு கட்டுப்படுத்தல் துறை அமைச்சரிடம் கேட்கப்பட வேண்டும்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஊராட்சி மன்றத்தில் நல்ல குடிநீர் இல்லாத நேரத்தில், வேறொரு ஊராட்சி மன்றப் பகுதியில் 'போர்' போட்டு, தண்ணீர் எடுக்கும்போது, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அதைத் தடை செய்கிறார்கள். அது பற்றி அரசு அதிகாரிகளிடத்தில் சொல்லும்போது எங்களால் ஒன்றும் செய்ய முடியாதென்று சொல்லுகிறார்கள். இதனால் பல திட்டங்கள் நிறைவேறாமல் இருக்கின்றன. எனவே, அப்படி இன்னொரு பகுதியிலிருந்து தண்ணீர் எடுக்கும்போது, அந்த மக்கள் அதைத் தடை செய்வதைத் தடுத்து, தண்ணீர் கிடைக்காத பகுதிக்கு தண்ணீர் வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் பல குக்கிராமங்களில் இருக்கின்றன. எனவே, அந்தந்தப் பகுதிகளில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளோடு கலந்து, கிராம மக்களிடத்தில் பேசி, சுமுகமான முடிவு ஏற்படுத்துவதுதான் சிறந்த வழியாகும். என்னுடைய தொகுதியில் அந்த முறையில் நான் வெற்றி பெற்றிருக்கிறேன்.